<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>

<u>O.S. No.511/2023</u>

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | **வா.த.சா.1** |
| பெயர் | கலியபெருமாள் |
| த/பெ | கண்ணப்பன் |
| வயது | 74 |
| ஊர் | அணிச்சம்பாளையம் |
| வட்டம் | விழுப்புரம் |
| மாவட்டம் | விழுப்புரம் |
| தொழில் | விவசாயம் |

மேற்படி சாட்சி இன்று 22.06.2026 நீதிமன்றத்தில் ஆஜராகி உறுதிமொழி சட்டம் 1967 பிரிவு 6 ன் படி அமர்வு எழுத்தரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியும் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டது.

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** தொடர்ச்சி</u>

1 முதல் 3 பிரதிவாதிகள் 7 ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த 17.01.2001 தேதியிட்ட அடமான பத்திரம் என்று தெரியவந்தது என்றால் 2015 ல் எனக்கு தெரியவந்தது . அப்போதே நான் பத்திர காப்பி எடுத்து பார்த்துவிட்டேன் . 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு செடடில்மெண்ட் செய்தது எப்போது தெரியவந்தது என்றால் செட்டில்மெண்ட் செய்தபோதே தெரியும் . 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரையப்பத்திரத்தை பற்றி எப்போது தெரியும் என்றால் 2023 ல் தெரியும். வழக்கு சொத்தின் பட்டாவை ரத்து செய்ய வேண்டி கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் 2023 ல் கொடுத்தேன். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டேன் என்றால் பி அட்டவணை

சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேன் . என்னுடைய சொத்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டி வழக்கு போட்டுள்ளேன் . இந்த சொத்தை ஒப்படைக்க வேண்டும் என என் வழக்கில் சொல்லியுள்ளேன். பி அட்டவணை சொத்துக்கு யார் நிலவரி செலுத்துகிறார்கள் என்றால் கண்ணப்பன் மற்றும் பட்டம்மாள் செலுத்துகிறார்கள் . அந்த ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் . வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அரசாங்கத்திற்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(Sd/- S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.